# சுருக்கம்

பணியமைப்பு – நகராட்சி நிர்வாக ஆணையரகத்தின்கீழ் உள்ள காலிப்பணியிடங்களை நிரப்ப அனுமதித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.1) துறை

அரசாணை (பத்தாண்டு) எண்.348 நாள்:26.07.2007.

படிக்கப்பட்டது:

1. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை, நேர்முக கடித எண்.33557/2006/கே.1, நாள் 18.12.2006.
2. அரசாணை (பத்தாண்டு) எண்.19, நகராட்சி நிர்வகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 18.01.2007.
3. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை, நேர்முக கடித எண்.41473/2006/எஸ்,4, நாள் 19.02.2007.
4. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை, கடித எண்.8274/2007/IT-1, நாள் 02.05.2007.
5. அரசு கடித எண்.3341/நப.1/07–4, நகராட்சி நிர்வகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 17.05.2007.
6. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை, கடித எண்.41473/2006/எஸ்.4, நாள் 15.06.2007.
7. அரசாணை (பத்தாண்டு) எண்.278, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 20.06.2007.

----

ஆணை:–

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், நகராட்சி நிர்வாக ஆணையரகத்தின்கீழ் பல்வேறு பணியமைப்புகளில் உள்ள காலிப்பணியிடங்கள் நிரப்புவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அரசிடம் அனுமதி கோரியிருந்தார். அவரது கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு, சிலவகை காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணை மூலம் அனுமதிக்கப்பட்டது. இருப்பினும் சிலவகை காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையரால் அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பாமல் விடுபட்டுபோன பணியிடங்களுக்கு மீண்டும் அரசுக்கு செயற்குறிப்பு அனுப்புமாறு மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் நகராட்சி நிர்வாக ஆணையரை கேட்டுக்கொள்ளப்பட்டது. அதனை தொடர்ந்து மேலே ஆறாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் 3–ம் நிலை நகராட்சிகளில் காலியாக உள்ள பல்வேறு பணியிடங்களை நிரப்ப அனுமதி கோரப்பட்டிருந்தது. நகராட்சி நிர்வாக ஆணையரின் கருத்துரு பரிசீலிக்கப்பட்டு, நிரந்தர காலிப்பணியிடங்களை நிரப்பிக்கொள்வதற்கு மேலே ஏழாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டது. நிரந்தர காலிப்பணியிடங்களை தவிர்த்து தொகுப்பூதியத்தில் அனுமதிக்கப்பட்ட காலியிடங்கள்,

.2..

எதிர்பார்க்கப்படும் காலியிடங்கள், கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்பட வேண்டிய காலிப்பணியிடங்கள் ஆகியவைகளையும் நிரப்பிக்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் மேலே ஆறாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். மேலும், தொகுப்பூதியத்தில் அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் அனைத்தும் நிரந்தர பணியிடங்களே என்றும், இவைகள் ஊதிய ஏற்றமுறையிலேயே நிரப்பப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். இப்பணியிடங்கள் குறித்த விவரம் இணைப்பு–IIல் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும், சிஸ்டம் அனலிஸ்ட், ப்ரோகிராமர், அஸிஸ்ட்டன்ட் ப்ரோகிராமர், டேட்டா என்ட்ரி ஆப்பரேட்டர் போன்ற பணியிடங்களில், 31 பணியிடங்கள் காலியாக உள்ளதென்றும், இப்பதவிகளில் நகராட்சி நிர்வாக ஆணையரகம் மற்றும் மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகங்களில் பணிபுரிபவர்களுக்கு கருவூலத்திலிருந்து சம்பளம் வழங்கப்படுகிறது என்றும், நகராட்சிகளில் பணிபுரிபவர்களுக்கு அந்தந்த நகராட்சியிலிருந்து சம்பளம் வழங்கப்படுகிறது என்றும், மேற்காணும் பணியிடங்களுக்கு இன்னும் பணிவிதிகள் உருவாக்கப்படவில்லை என்றும், இப்பணியிடங்களை நிரப்ப அலுவலர்குழுவின் அனுமதியும் பெற்று தருமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். இப்பணியிடங்கள் குறித்த விவரம் இணைப்பு–Iல் கொடுக்கப்பட்டுள்ளது.

2. நகராட்சி நிர்வாக ஆணையரின் கருத்துரு பரிசீலிக்கப்பட்டது. இணைப்பு–Iல் குறிப்பிடப்பட்டுள்ள பணியிடங்களுக்கு பணிவிதிகள் இன்னும் உருவாக்கப்படவில்லை. பணிவிதிகள் உருவாக்கப்படாத இப்பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்பி கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அனுமதி அளிக்கலாம் என்றும், மேலும், மூன்றாம் நிலை நகராட்சிகளில் காலியாக உள்ள இணைப்பு–II ல் குறிப்பிடப்பட்டுள்ள பணியிடங்கள் நிரந்தரப் பணியிடங்கள் என்று நகராட்சி நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ள நிலையில் இக்காலிப்பணியிடங்களையும் நிரப்பிக் கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அனுமதி அளிக்கலாம் என்றும் அரசு முடிவு செய்து, அதன்படியே, இவ்வாணையின் இணைப்பு–Iல் குறிப்பிடப்பட்டுள்ள 31 காலிப்பணியிடங்களையும், இணைப்பு–IIல் குறிப்பிடப்பட்டுள்ள 413 காலிப்பணியிடங்களையும் பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறையின் கீழ்க்காணும் ஆணைகளில் வெளியிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு நேரடி நியமனம் மூலம் நிரப்பிக் கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

1. அரசாணை (நிலை) எண்.91, ப.(ம)நி.சீ. துறை, நாள் 06.07.2006.
2. அரசாணை (நிலை) எண்.95, ப.(ம)நி.சீ. துறை, நாள் 12.07.2006.
3. அரசு கடித (நிலை) எண்.121, ப.(ம)நி.சீ. துறை, நாள் 10.08.2006.
4. அரசு கடித (நிலை) எண்.187, ப.(ம)நி.சீ. துறை, நாள் 16.10.2006.

மேலும், நகராட்சி நிர்வாக ஆணையர் காலிப் பணியிடங்களை நிரப்பும்போது நிதித் துறை தெரிவித்துள்ள கீழ்க்காணும் நிபந்தனைகளையும் தவறாது கடைபிடிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்படுகிறது:–

(அ) காலிப்பணியிடங்களை நிரப்புகையில் வழங்கப்படும் ஊதிய செலவினம் 49 விழுக்காட்டிற்கு மிகையாகக்கூடாது மற்றும் பற்றுச் செலவினங்கள் (debt charges) 25 விழுக்காட்டிற்குள் இருக்க வேண்டும்.

.3..

(ஆ) காலிப்பணியிடங்களை நிரப்புகையில் ஊதியச் செலவினம் 49 விழுக்காட்டிற்கு மிகையாகுமேயானால், அதுபோன்ற நேர்வுகளில் அரசின் முன் அனுமதி பெற வேண்டும்.
(இ) இந்த ஆண்டு 50 விழுக்காடு பணியிடங்களையும், அடுத்த ஆண்டு 50 விழுக்காடு பணியிடங்களையும் நிரப்புதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே. தீனபந்து
அரசுச் செயலாளர்

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை – 600 005.
இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறை, சென்ன – 600 108.

நகல்:–
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அநமு.2) துறை,
சென்னை – 600 009.
இருப்பு கோப்பு / உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

## இணைப்பு–I

| வ. எண். | பதவியின் பெயர் | காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம் | மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம் | நகராட்சிகள் |
| 1. | சிஸ்டம் அனலிஸ்ட் | 1 | --- | --- |
| 2. | ப்ரோகிராமர் | 1 | 2 | --- |
| 3. | அஸிஸ்ட்டன்ட் ப்ரோகிராமர் | --- | --- | 15 |
| 4. | டேட்டா என்ட்ரி ஆப்பரேட்டர் | 2 | --- | 10 |
| | மொத்தம் | 4 | 2 | 25 |
| **கூடுதல் மொத்தம்= 31** (4 + 2 + 25) | | | | |

## இணைப்பு–II

### 3–ம் நிலை நகராட்சிகளிலுள்ள காலிப்பணியிடங்களின் விவரம்

| வ. எண். | பதவியின் பெயர் | தற்போது காலியாக உள்ள மற்றும் பணி ஓய்வின் காரணமாக ஏற்படும் பணியிடங்களின் எண்ணிக்கை | கருணை அடிப்படையின்கீழ் வரும் காலிப்பணியிடங்கள் | மொத்த காலிப்பணியிடங்கள் |
|---|---|---|---|---|
| 1. | அலுவலக உதவியாளர் | --- | 1 | 1 |
| 2. | பதிவறை எழுத்தர் | 1 | --- | 1 |
| 3. | துப்புரவுப் பணியாளர் | 17 | 60 | 77 |
| 4. | டிராக்டர் / லாரி டிரைவர் | 1 | 2 | 3 |
| 5. | டர்ன் கார்க் | 2 | --- | 2 |
| 6. | குடிநீர் திட்ட காவலாளி | --- | 1 | 1 |
| 7. | பம்ப் மெக்கானிக் | 1 | --- | 1 |
| **தொகுப்பூதியத்தின்கீழ் ஒப்பளிப்பு செய்யப்பட்டு பின்னர் ஊதிய ஏற்றமுறையில் மாற்றியமைக்கப்பட்ட பணியிடங்கள்** | | | | |
| 8. | துப்புரவுப் பணியாளர் | 183 | 11 | 194 |
| 9. | தெரு மின்விளக்கு பணியாளர் | 25 | --- | 25 |

..2..

| | | | | |
|---|---|---|---|---|
| 10. | தெரு மின்விளக்கு உதவியாளர் | 30 | 1 | 31 |
| 11. | குடிநீர் வழங்கல் பிரிவு குழாய் ஆய்வாளர் | 18 | --- | 18 |
| 12. | உதவியாளர் | 13 | --- | 13 |
| 13. | வடிகட்டி படுகை இயக்குபவர் | 5 | --- | 5 |
| 14. | தலைமை நீரேற்று நிலைய இயக்குநர் | 5 | --- | 5 |
| 15. | குடிநீர் குழாய் பொருத்துநர் | 10 | --- | 10 |
| 16. | மின் வினைஞர் நிலை 1 | 11 | --- | 11 |
| 17. | மின் வினைஞர் நிலை 2 | 7 | --- | 7 |
| 18. | மீட்டர் ரீடர் | 7 | --- | 7 |
| 19. | குடிநீர் திட்ட காவலாளி | 1 | --- | 1 |
| மொத்தம் | | | | 413 |

கே. தீனபந்து
அரசுச் செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.